# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

மனு எண். **743/ந/2019**
நாள் : **25/09/2019**

**உரிமம் பெற்ற நில அளவையர் சங்கம்,**
**செங்கல்பட்டு மண்டலம்.** – **முறையீட்டு மனுதாரர்**

**திருமதி K. கவிதா,**
**நகரமைப்பு ஆய்வாளர்,** – **எதிர் மனுதாரர்**
**திருவேற்காடு நகராட்சி,**
**திருவேற்காடு..**

திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு நகராட்சி, நக்ரமைப்பு ஆய்வாளர் திருமதி K. கவிதா குறித்து செங்கல்பட்டு மண்டல உரிமம் பெற்ற நில அளவையர் சங்கத்தினர் தெரிவித்த குற்ற முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு நகராட்சி, நகரமைப்பு ஆய்வாளர் திருமதி K. கவிதா குறித்து செங்கல்பட்டு மண்டல உரிமம் பெற்ற நில அளவையர் சங்கம் என்ற பெயரில் நாள் மற்றும் கையொப்பமிடாத குற்ற முறையீடு மனுவொன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட குற்ற முறையீட்டு மனுவில் கீழ்க்காணும் தகவல்களைத் தெரிவித்து துறைரீதியான விசாரணை மேற்கொண்டு தனியரை பணியிடை நீக்கம் செய்ய வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது :-

1. நகராட்சி விதிமுறைகளை மீறி கட்டட அனுமதி வழங்கியது ;

2. பூந்தமல்லி, போரூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட அடுக்குமாடி கட்டட நிறுவனங்களிடம் கையூட்டு வாங்கியது ;

3. ரூபாய் 500=– கோடிக்கு மேல் முறைகேடாக சொத்துக்கள் சேர்த்தது.

2. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து எதிர்மனுதாரரான நகரமைப்பு ஆய்வாளர் திருமதி K, கவிதா அவர்களிடம் 17.09.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. திருவேற்காடு நகராட்சியில் 11.07.2017 முதல் நகரமைப்பு ஆய்வாளராகப் பணிபுரிவதாகவும், உரிமம் பெற்ற நில அளவையர் சங்கத்தினரின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றங்கள் எதுவும் தன்னால் செய்யப்படவில்லை என விசாரணையின் போது தெரிவித்தார். தன்

பெயரிலோ அல்லது தனது கணவர் மற்றும் உறவினர்கள் பெயரிலோ சொத்துக்கள் வாங்கப்படவில்லை எனவும், அம்பத்தூர் நகரில் வாடகை வீட்டில் குடியிருந்து வருவதாகவும் தெரிவித்தார். தன் மீது தெரிவித்துள்ள புகார்கள் போன்று மற்ற நகராட்சிகளில் பணிபுரியும் நகரமைப்பு ஆய்வாளர்கள் மீதும் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றும் இதற்கு காரணமானவர் பத்திரிக்கையாளர் திரு இராமர் என்றும் விசாரணையின் போது தெரிவித்தார். நகராட்சி அலுவலர்களை சந்தித்து பணம் கேட்பதும் கொடுக்கவில்லை என்றால் இதுபோன்ற புகார்களை தெரிவிக்கும் செயல்களில் ஈடுபடுவார் என்று மேற்குறிப்பிட்ட பத்திரிக்கையாளர் திரு இராமர் குறித்து தெரிவித்தார்.

3. திருவேற்காடு நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திருமதி K. கவிதா அவர்கள் மீது தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதார ஆவணங்கள் எதுவும் முறையீட்டு மனுதாரரான உரிமம் பெற்ற நில அளவையர் சங்கத்தினரிடமிருந்து பெறப்படவில்லை. மேலும், குற்ற முறையீட்டு மனுவும் கையொப்பமிடாமலும், அனுப்புநர் முகவரியும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரிடமும் இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணை மேற்கொள்ள இயலவில்லை. குற்ற முறையீடுகள் குறித்து எதிர்மனுதாரரான நகரமைப்பு ஆய்வாளர் திருமதி K. கவிதா அவர்களும் மறுத்து விளக்கமளித்துள்ள நிலையில் அவர் மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்ற முறையீட்டிற்கு போதுமான ஆதார ஆவணங்கள் இல்லாத நிலையில் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக்கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2019–ஆம்** ஆண்டு, செப்டம்பர் திங்கள், **25–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/உண்மைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. **திருமதி K. கவிதா,**
   **நகரமைப்பு ஆய்வாளர்,**
   **திருவேற்காடு நகராட்சி,**
   **திருவேற்காடு.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **திருவேற்காடு நகராட்சி,**
   **திருவேற்காடு.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**